## தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 3 இன் 32 ஆம் அத்தியாயத்திற்கு முரணாக பெறப்பட வேண்டிய திரைப்படத் தயாரிப்பு வருமானமான ரூபா 1,043,265 ஆனது செலுத்தப்பட வேண்டிய திரைப்படத் தயாரிப்புச் செலவினமான ரூபா 2,537,597 இற்கு சீராக்கப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 1,494,332 தொகை கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய திரைப்பட வாடகைப் பங்களிப்பான ரூபா 1,876,692 தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 83,101 திரைப்பட வாடகைப் பங்களிப்பானது வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறப்பட வேண்டிய வருமானமான ரூபா 1,793,591 இனை கணக்கீடு செய்கையில் வருமானக் கணக்கிற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 73,616,244 திரைப்பட தயாரிப்பு கடன் மீதியில் 99% ஆனவை அல்லது ரூபா 72,923,005 ஐந்து ஆண்டுகளிற்கும்

மேலான மீதியாக காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் தரணய திரைப்படத்திற்கான கடன் தொகையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 100,000 இனைத் தவிர்த்து திரைப்படங்கள் காட்சிப்படுத்தாமை காரணமாக எந்தவொரு கடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் அறவிடப்பட முடியாதவை என மதிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையின் அளவு ரூபா 57,714,499 அல்லது 78% ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் ஐயக் கடனாக ரூபா 7,213,526 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டைக் காட்டிலும் ரூபா 5,059,167 அல்லது 235% அதிகரிப்பாகும். உடுகங்யாமய திரைப்படத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,783,032 ஆன மொத்தக் கடன் தொகையும் 2011 ஆம் ஆண்டில் ஐயக்கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

''திரைப்படங்களின் தயாரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகள் குறித்த திரைப்படக் காட்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்தே அறவிடப்படுவதன் காரணமாக இத் திரைப்படம் இந்த ஆண்டில் காட்சிப்படுத்தப் படாமையால் இக்கடன் தொகையினை அறவிட முடியாது எனக் கருதி முழுத்தொகையும் ஐயக்கடன் ஒதுக்கீடு எனக் காட்டப்பட்டதாக'' தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தினை பேணிவருவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் திரப்படங்களிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்பு நிதியிலிருந்து 20% நிதியத்திற்கு வழங்கப்படுகின்ற போதிலும் 2011 திசெம்பர் 31 இல் நிதியத்திற்கு பெறப்பட வேண்டியிருந்த திரைப்பட வாடகைப் பங்களிப்பு ரூபா 17,039,059 ஆக காணப்பட்டது. அதில் ரூபா 7,933,187 அதாவது 47%, 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட மீதியாகும்.

(ஈ) திருத்தங்கள் மற்றும் நவீனமயப்படுத்தலிற்காக 5 திரையரங்குகளுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகள் மற்றும் அதற்குரிய வட்டித் தொகைகளிலிருந்து 2011 ஜனவரி 01 இல் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 14,544,045 ஆக காணப்பட்டதுடன் அக் கடனிற்காக 2011 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,231,442 அல்லது 9% ஆகும். 2 திரையரங்குகளிலிருந்து எந்தவொரு தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
| --- | --- |
| (அ) 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க திரைப்பட அபிவிருத்தி நிதியம் தொடர்பான வர்த்தமானி | |
| (i) பணிப்புரை இல. 6 (இ) | வழங்கப்பட்ட கடன் தொகையினை மீளளிப்பதில் தாமதம் காணப்படின் அதன் மீது அறவிடப்பட வேண்டிய மிகை அறவீட்டினை நிச்சயித்து அறவிடப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>“ குறித்த திரைப்படக் காட்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்தே கடன் தொகைகள் அறவிடப்படுகின்றன. வருமானம் குறைவடைந்திருந்தமையால் கடன் தொகையினை அறவிட முடியாதுள்ளது. இந் நிலையில் கடன் தொகையினை மீள அறவிடுவதிலுள்ள தாமதத்தின் மீது மிகை அறவீட்டினை கணிப்பீடு செய்து வருமானமாகவும் கடன்பட்டோராகவும் காண்பிக்கையில் பெறமுடியாத வருமானத்தினை ஏடுகளிற்கு கொண்டுவர வேண்டிய நிலையேற்படும். இருந்த போதிலும் கடனை அறவிடக்கூடிய நிலை ஏற்படுமாயின் குறித்த மிகை அறவீட்டினையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக” தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 168(3) | இரத்துச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் மற்றும் இரண்டாம் பிரதிகள் பற்றுச் சீட்டுப் புத்தகத்துடன் காணப்பட வேண்டிய போதிலும் இரத்துச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2000 யூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | 2000 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 பெறுமதி கொண்ட நிலையான வைப்புக்களிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. அது வங்கி மேலதிகப் பற்றொன்றிற்காக பிணையாக வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 3,628,437 வரிக்கு முன்னரான பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான வரிக்கு முன்னரான பற்றாக்குறை ரூபா 16,488 ஆக காணப்பட்மையால் வரிக்கு முன்னரான பற்றாக்குறையில் ரூபா 3,611,949 அல்லது 21,906% அதிகரிப்பொன்று காணப்பட்டது. ஐயக் கடனிற்கான ஏற்பாடு ரூபா 5,059,167 ஆல் அதிகரித்திருந்தமையே பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு விசேட காரணமாகியிருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | மீளாய்வாண்டு (2011) | முன்னைய ஆண்டு (2010) | குறைவு/ அதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வெளிநாட்டுத் திரைப்படங்களின் படப்பிற்கான அனுமதிக் கட்டணங்கள் மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பவியலாளர்களிற்கான பெறுவனவுகள் | 2,444,725 | 1,122,300 | 1,322,425 | 118 |
| திரைப்படங்களை காட்சிப்படுத்தியமையால் கிடைத்த வருமானம், திரைப்பட வாடகைப் பங்களிப்பு மற்றும் தயாரிப்புக் கடன் வட்டி | 332,346 | 353,835 | (21,489) | 6 |
| மிகை அறவீடு | - | 4,000 | (4,000) | 100 |
| சில்லறை வருமானங்கள் | 1,224,696 | 1,289,449 | (64,753) | 5 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 7,213,526 | 2,154,359 | (5,059,167) | 235 |
| கணக்காய்வுக் கட்டணம், வங்கிக் கட்டணம், எழுது கருவிகள், திரைக்கதை அங்கீகாரம், உபசாரச் செலவினம் | 62,851 | 34,213 | (28,638) | 84 |
| திரைப்பட தயாரிப்புச் செலவினம் | - | 243,673 | 243,673 | 100 |
| | | | (3,611,949) | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய பணிப்புரைகளின் 4 ஆம் இலக்க பணிப்புரையின் கீழ் உள்ள (அ) தொடக்கம் (ஓ) வரையான அபிவிருத்தி நிதியத்திற்கான பணிகள் எதுவும் 2011 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2011 இன் பாதீட்டு மதிப்பீட்டினால் ரூபா 2,030,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | திரைப்பட விழாக்களிற்காக | 500,000 |
| (ii) | பாடநெறிகள் செலவினம் | 500,000 |
| (iii) | தேசிய திரைப்படத் தொழிலுக்கான மானியத்திற்காக | 500,000 |
| (iv) | அபிவிருத்தி செயற்திட்டங்கள் | 530,000 |

''நிதியத்தின் பணிகள் முறைப்படி செயற்படுத்தப்படாமையால் இச் செயற்பாடுகள் செயலிழந்து காணப்பட்டதாகவும் எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குவதாகவும்'' தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தினால் தயாரிக்கப்பட்டு திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட "வேகன்த வலவ்வ" திரைப்படத்திலிருந்து 2005 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,547,454 தொகையினை திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிரிஉல்லை திரையரங்கிற்காக வழங்கப்பட்டிருந்த கடன் மற்றும் வட்டித் தொகை ரூபா 2,355,959 இலிருந்து எவ்விதக் கடன் தவணைக் கட்டணத்தினையோ அல்லது வட்டித் தொகையினையோ மீள அறவிட்டுக் கொள்வதற்காக தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தினால் எவ்வித சட்டரீதியான நடவடிக்கையினையும் எடுக்காது மொத்தப் பெறுமதியும் அறவிடப்பட முடியாதது என மீளாய்வாண்டில் நிச்சயித்து கடன்பட்டோர் மீதியிலிருந்து கழித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அக் கடன் தொகை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் இந்திய தனியார் ஆய்வுகூடமொன்றுடன் இணைந்து 2007 ஆம் ஆண்டில் "சந்த திய சலு" என்ற பெயரில் திரைப்பட மொன்றினைத் தயாரிப்பதற்குத் திட்டமிட்டு ரூபா 200,000 செலவிட்ட பின்னர் தயாரிப்பாளர் ஒருவரை தேடுவதற்கு முடியாது போனமை காரணமாக தயாரிப்பினை கைவிட்டு திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் திரைப்பட இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் கூடப்பட்டிருந்ததுடன் முக்கிய செயற்பாட்டுத் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

2008 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 227,283 தொகையொன்று பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 பதவியணி நிர்வாகம்

இரண்டு சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்டிருந்த பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானங்களின் படி நிதியத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக கூட்டுத்தாபனத்தின் பத்து உத்தியோகத்தர்களிற்கு மாதாந்தம் ரூபா 29,000 வீதம் செலுத்துவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்ததுடன் 2007 தொடக்கம் 2011 வரை பதவியணிச் செலவினத்திற்காக ரூபா 1,711,000 ஒதுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் நிதியத்தின் நோக்கங்கள் எதுவும் நிறைவேற்றப்படாதிருக்கையிலும் 2011 ஆம் ஆண்டிற்காக பதவியணிச் செலவினமாக ரூபா 348,000 தொகையினை ஒதுக்கியிருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை அத்தொகையினால் அதிகரித்திருந்தது. மேலும் சிறப்பான முறையில் பணிப்பொறுப்புக்களை ஒப்படைத்து தேவையான உத்தியோகத்தர்களை மாத்திரம் இச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுகளிற்கேனும் தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடனை அறவீடு செய்தல்

(ஆ) மிகை அறவீடு